تاميلي
தமிழ்

MahadSunnah

معهد السنة
As-Sunnah College

# أصحاب الفيل

# யானைப் படை வரலாறு


ஆசிரியர்:

கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர் ,

மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.



www.alsarhaan.com

WWW.MAHADSUNNAH.COM

# யானைப் படை வரலாறு

நபி (ஸல்) அவர்களின் பிறப்பிற்கு சற்றுமுன் ஒர் ஆச்சரியமான சம்பவம் மக்காவில் இடம்பெற்றது. அதாவது ஹபஷா மன்னன் சார்பாக ஏமன் நாட்டிற்கு கவர்னராக நியமிக்கப்பட்ட அப்ரஹா என்பவன் ஏமன் தலைநகர் சனாவில் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தை நிர்மாணித்து மக்காவிற்கு ஹஜ்ஜு க்காக செல்வதற்கு பதிலாக அதன் பக்கம் அரபு சமூகத்தை ஈர்த்துக்கொள்ள விரும்பினான். இதில் அவனுக்கு மக்காவின் வணிகம், அது சார்ந்த நடவடிக்கைகளை ஏமனுக்கு திருப்புவதும் நோக்கமாக இருந்தது.

மன்னனுக்கு இத்திட்டத்தை எடுத்துரைக்க அவனும் அதை ஏற்று சந்தோசப்பட்டான். இறுதியில் பிரமாண்டமான தேவாலயம் அமைக்கப்பட்டு அதற்கு ''குல்லய்ஸ்'' என்றும் பெயரிடப்பட்டது.

இதை பார்த்து ஆத்திரப்பட்ட மக்காவாசிகளில் ஒருவர் அங்கு சென்று அதை கலங்கப்படுத்தி, அசுத்தத்தால் அதன் சுவர்களிலும் பூசினார்.

இதைக் கண்ணுற்ற அப்ரஹா ஆத்திரமடைந்து மக்காவையும், கஃபாவையும் தரைமட்டமாக்க வேண்டுமெனும் நோக்கில் பெரும் படையை தயார் செய்து, அப்படையில் 13 யானைகளையும் இணைத்து அவற்றில் தலைமை யானைக்கு மஹ்மூத் என்றும் பெயரிட்டான்.

இப்படி மக்காவை நோக்கி செல்லும் வழியில் அரபுக் கோத்திரங்கள் அவனையும் அவனது படையையும் எதிர்த்தும் அனைவரையும் தோற்கடித்து மக்காவின் எல்லைப்பகுதிக்கு வந்தடைந்தது அப்ரஹாவின் படை.

மக்கமா நகரின் தலைவர் அப்துல் முத்தலிப் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில் அப்துல் முத்தலிப் அவர்களின் பறிக்கப்பட்ட ஒட்டகைகளை திருப்பிக் கொடுப்பது எனவும், அப்ரஹா விரும்பியதை செய்ய அவன் வழியில் விட்டுவிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் அப்துல் முத்தலிப் அவர்கள் மக்காவாசிகளைப் பார்த்து நீங்கள் எல்லோரும் பெண்கள், குழந்தைகளை அழைத்துக்கொண்டு மலை உச்சிக்கு சென்றுவிடுங்கள், அப்ரஹாவின் திடீர் தாக்குதலில் இருந்து உங்களை காப்பாற்றிக் கொள்ளுங்கள் எனக் கட்டளையிட்டார்.

அப்ரஹாவின் படையோ மக்காவை நோக்கி புறப்பட ஆரம்பித்து முஹஸ்ஸிர் பள்ளத்தாக்கின் மத்தியில் சென்று கொண்டிருக்கயில் பறவைக் கூட்டங்கள் தொடராக வந்து கொண்டைக்கடலை அளவிலான கற்களை சரைமாரியாக அவர்கள் மேல் வீசின. யார் மேல் அக்கற்கள் விழுமோ அவர்கள் உருகி உருக்குலைந்து சின்னாபின்னமாகினர். அப்புறம் அப்ரஹாவையும் கல் தாக்கி அவனது தசைகள் துண்டு துண்டாக கழன்று விழ படையை விட்டு விரண்டோடிய அவன் வழியில் செத்து மடிந்தான்.

இச்சம்பவம் அல்லாஹ்வின் அற்புதங்களில் ஓர் அற்புதமாகவும் மக்காவிற்கும், இறை ஆலயத்தின் காவலர்களான மக்காவாசிகளுக்கும் இறைவனின் பேருதவியாகவும், குறைஷிகளுக்கு அவன் அருளிய மாபெரும் அருளாகவும் பார்க்கப்பட்டது. இது பற்றி அல்லாஹ் திருமறையில்:


بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ
أَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِأَصْحَابِ الْفِيلِ ١ أَلَمْ يَجْعَلْ
كَيْدَهُمْ فِي تَضْلِيلٍ ٢ وَأَرْسَلَ عَلَيْهِمْ طَيْرًا أَبَابِيلَ ٣
تَرْمِيهِمْ بِحِجَارَةٍ مِّن سِجِّيلٍ ٤ فَجَعَلَهُمْ كَعَصْفٍ مَّأْكُولٍ ٥

*யானைப்படையை அவன் என்ன செய்தான் என்று நபியே நீர் பார்க்கவில்லையா? அவர்களின் சூழ்ச்சியை தோல்வியில் ஆக்க வில்லையா ? அபாபீல் பறவைகளை அவர்களுக்கு அனுப்பி சிஜ்ஜில் எனும் கற்களால் அவர்களை வீசி மெல்லப்பட்ட வைக்கோல் போன்று அவர்களை ஆக்கினான்.*